TAMIL

தொழிலாளர்களின் உரிமைகள்

# எச்சரிக்கை




மார்ச் 2, 2013 இல் புதுப்பிக்கப்பட்டது

சங்க அங்கத்துவர்களுக்கான பிரச்சாரச் செய்திகள

## Harper, Hudak இருவரும் தொழிலாளர் சட்டத்தில் ஊக்குவிக்கும் மாற்றங்கள் தொழிலாளர் ஊதியத்தைக் குறைப்பதோடு கனேடிய சமூகத்தையும் பாதிக்கின்றது

அடுத்த முறை ஒன்றாரியோ தேர்தலில் வெற்றி பெற்றால் தொழிலாளர் சட்டங்களில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் தொழிற் சங்கங்களை வலுவிழக்கச் செய்வேனென ஒன்ராரியோ “கன்சவேட்டிவ்” (பழைமைவாத கட்சி) தலைவர் Tim Hudak அறிவித்துள்ளார்.

பிரதம மந்திரி Harper 377 வது மசோதா மூலம் இதை ஏற்கனவே முன்வைத்துள்ளார். நிதிசார் அறிக்கை விடுதல்களை அசாதாரணமாகக் கோருவதன் மூலம் சங்கங்கள் பாதிப்படையுமாறு இச்சட்டமூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் முன்னேற்றகரமான அரசியல் குரலை Harper வெகு விரைவில் மௌனிக்கவுள்ளார்.

**Hudak ஆல் தற்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ள தொழிலாளர் சட்ட மாற்ற விபரங்கள்**

- தொழிற் சங்கத்தின் கூட்டு உடன்படிக்கையின் படி, அதன் தொழிலாளர்கள் சேவைகளையும் பயன்களையும் பெற்றுக் கொள்பவர்களாக இருந்தும், ர்ரனயம இன் திட்டத்தின்படி அவர்களது சங்க நிலுவையைச் செலுத்தாமல் விடுவதற்கும் அல்லது அங்கத்துவத்தில் இருந்து விலகுவதற்கும் முடியும்.
- முதலாளிகள் தொழிலாளர்களுடைய சம்பள காசோலைகளில் இருந்து சங்க நிலுவைகளைச் சேகரிப்பதில் இருந்து விடுபட முடியும். முதலாளிகளுக்கு நிலுவைகளைக் கழிப்பதற்கு எதுவும் செலவாகப் போவதில்லை. எப்படியாயினும் தொழிற்சங்கத்திற்கு சங்க நிலுவையை சேகரிப்பது என்பது நேர விரயத்தோடு அதிக செலவுமானது.

தொழிற் சங்கங்கள் ர்ரனயம இன் கொள்கையினால் தீவிரமாக வலுவிழுக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்களுடைய ஊதியங்களையும் சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வது மிகவும் கடினமானதாக இருக்கப் போகின்றது.

### Hudak தொழிலாளர் சட்டங்கள் “free riders”ஐ உருவாக்கும்.

தொழில் தருணர்கள் தொழிலாளர்களை தொழிற்சங்க நிலுவைகளைச் செலுத்துவதை நிறுத்துவதற்கும் தொழிற்சங்கத்திலிருந்து விலகுவதற்கும் ஊக்கமளிப்பார்கள். Hudak இன் “free riders” சட்டத்தினால் ஏற்படும் தாக்கங்களாவன:

- உங்களுடைய தொழிற் சங்கத்தின் பேரம் பேசும் ஆற்றலுக்கு நடக்கப்போவது என்ன?
- உங்களுடைய ஊதியத்திற்கம் சலுகைகளுக்கும் நடக்கப்போவது என்ன?
- தொழிற்சங்கத்தின் சேவை புரியும் ஆற்றலுக்கு நடக்கப்போவது என்ன?
- ‘Free Riders’ம் சங்க அங்கத்தவர்களும் சேர்ந்து வேலை புரியும் பணியிடம் எவ்வாறு இருக்கும்?

# ‘கொன்சவேட்டிவ்’ சட்டங்கள் - நமது சமூகத்திற்கும் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் எதிரான செய்தி

தொழிற்சங்கம் வலுக்குன்றுமானால் தொழிற்சங்க தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கம் அல்லாத தொழிலாளர்களுக்கும் ஊதியம் குறைவடையும். வறுமை கோட்டின் கீழ் உள்ள வேலைகளை மேற்க் கொண்டு வருவது தொழிற் சங்கத்திற்கு கடுமையானதாகிவிடும்.

பொதுசுகாதார கவனிப்பு, பொதுக்கல்வி மட்டுமல்லாது ஏனைய பொது நல வேலைகளும் அபாயத்திற்குத் தள்ளப்படவுள்ளது. பொதுச் சேவைகள் புரியும் தொழிலாளரின் பாதுகாப்பை இந்த “கொன்சவேட்டிவ்” மூட விரும்புகிறார்கள்.

சிக்கன நிகழ்ச்சி நிரல் துரிதப்படுத்தப்படும் - 99 வீதத்தவரின் உழைப்பு ஒரு வீதத்தோரை செழிப்படையச் செய்யும். தொழிற் சங்கங்களை மௌனிக்கச் செய்வது சமூகத்தின் வளத்திலும் அதிகாரத்திலும் மென்மேலும் சம நிலையற்ற தன்மையை உருவாக்கும்.

சமூக நீதி பின்தள்ளப்படும் “கொன்சவேட்டிவ” பெண்களுக்கும் சுற்றுச் சூழல் அமைப்புக்களுக்குமான ஒதுக்கீட்டு நிதியை ஏற்கனவே குறைத்து விட்டார்கள். தொழிலாளர் இயக்கத்திற்கு ஏற்படும் பலத்த அடி அவர்களது சம உரிமை போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும்.

## Harper, Hudak இருவரதும், “வேலையாளுக்கெதிரான தொழிலாளர் சட்டங்களை” வெற்றிபெறுவதற்கு பின்வருவனவற்றை நீங்கள் செய்யமுடியும்.

- “எச்சரிக்கை” எனும் துண்டுப்பிரசுரத்தை சக வேலையாட்களுக்கு **விநியோகிப்பதுடன்** உங்கள் கூட்டு ஒப்பந்தத்திற்கும் சமூகத்திற்குமான தாக்கத்தைப்பற்றிக் கலந்துரையாடல்.
- பிரச்சார நடவடிக்கைகளையும் பிரச்சாரம் செய்யப் பயன்படும் பொருள்களைப்பற்றியும் அறிய உங்கள் சங்க இணையத்தளத்திற்கும் **www.labourcouncil.ca** என்ற தளத்திற்கும் **செல்லவும்.**
- வேலையாட்களுக்கு எதிரான கொள்கைகளையுடைய அரசியல் வாதிகளுக்கு **ஒருபோதும்** வாக்களிக்க வேண்டாம்.




ஏங்களால் வெல்லமுடியும். எங்கள் சங்கத்தை தற்காத்து புதுப்பிக்க எங்களால் முடியும்.
ஏல்லோருக்கும் நல்ல தொழில்வாய்ப்பைத் தரும் பொருளாதாரத்தைப்பற்றிய தெளிவான பார்வையை எங்களால் தரமுடியும்.

# ‘கொன்சவேட்டிவ்’ இனது இலக்கு ஒரு குறைந்த சம்பள பொருளாதாரமாக உள்ளது

தாங்கள் தொழிலாளர் பக்கமென்று ‘கொன்சவேட்டிவ்’ கோருகின்றார்கள். உண்மையல்ல! அவர்கள் அடுத்தடுத்து தொழிலாளர்களுடைய ஊதியத்திலும் ஓய்வூதியத்திலும் குறைப்பைச் செய்துள்ளார்கள்.

- என்ன எதிர்காலத்தை இந்த குறைந்த சம்பளப் பொருளாதாரத்தில் வருங்காலச் சந்ததி கொண்டுள்ளது?
- எங்கள் சமூகத்தில் - விசேஷ மாக நம்பிக்கைக்கு ஏற்கனவே போராடுபவர்களுக்கு நடக்கப் போவது என்ன?

# ‘கொன்சவேட்டிவ்’ தொழிலாளர் சட்டங்கள் சனநாயகத்திற்கு முரனானது

Harper, Hudak ஆகிய இருவரும் அரசியல் பிரசாரங்களுக்கும் சமூகப் பிரச்சனைகளுக்குமான தொழிலாளர் நிதியத்தில் குறைப்பு செய்வதற்கு முயன்ற வண்ணம் உள்ளார்கள். சங்க அங்கத்தவர்களின் உரிமைகளைக் கருத்திற் கொண்டு தாங்கள் ஊக்கப்படுத்தப்பட்டவர்களாகக் கோருகிறார்கள். உண்மையல்ல!

- Harper, Hudak ஆகிய இருவரும் ‘கொன்சவேட்டிவ்’ கொள்கையின்படீ சென்று தொழிலாளர் இயக்கத்தை மௌனிப்பதற்கு முயல்கின்றார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?